**OS.NO. 147/2019 நாள் 18.01.2024**

**பி.சா.1 தினேஷ்குமார் மீண்டும் அழைக்கப்பட்டு 2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1 ஆம் பிரதிவாதி என்னுடைய மூத்த சகோதரர். 2 ஆம் பிரதிவாதி என்னுடைய மற்றொரு மூத்த சகோதரர். 2 ஆம் பிரதிவாதிக்கும் எனக்கும் 8 வருடங்கள் வித்தியாசம். 2 ஆம் பிரதிவாதி டிப்ளோமா படித்திருக்கிறார். 1989 ஆம் வருடமே 2 ஆம் பிரதிவாதி படிப்பை முடித்துவிட்டார். 1990 லிருந்து வெளிநாட்டிற்கு வேலைக்கு போய்விட்டார் என்றால் ஆமாம். வழக்கு சொத்து 1992 ஆம் ஆண்டுதான் கட்டப்பட்டது. அந்த காலகட்டத்தில் 2 ஆம் பிரதிவாதி வெளிநாட்டில்தான் இருந்தார். என்னுடைய தந்தை காவலராக காவல்துறையில் வேலை பார்த்தார். 1997 ஆம் ஆண்டுதான் பணி ஓய்வு பெற்றார். என் தந்தை பணியில் இருந்தபோது என்ன சம்பளம் வாங்கினார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய சகோதரி சகாயராணிக்கு 1992 ஆம் ஆண்டு திருமணமானது. 2 ஆம் வாதிக்கு 1997 ஆம் ஆண்டு திருமணமானது. 1997 ஆண்டிலும் 2 ஆம் பிரதிவாதி வெளிநாட்டில்தான் இருந்தார். வாதிகள் கூட்டுறவு சொசைட்டியில் மாதம் ரூ 554 என பத்து வருடங்கள் செலுத்தி கடனை அடைத்தற்கு ஆவணங்களை வாங்கி தாக்கல் செய்திருக்கிறேன். 1992 ஆம் ஆண்டில் வீடு கட்டும்போது எனக்கு வயது 15 என்றால் சரிதான். என் அம்மா பெயரில் உள்ள நிலத்தை விற்றுதான் என் அப்பா கடனை அடைத்தார். என் அம்மாவின் பெயரில் சொத்து இருந்தது என்பதை காட்ட வில்லங்கசான்று தாக்கல் செய்திருக்கிறேன். பி.சா.ஆ.6 என் அம்மா பெயரில் இருந்த சொத்துக்கள் சம்மந்தபட்ட வில்லங்க சான்று இல்லை என்றால் ஆமாம். 2002 ஆம் ஆண்டில் என் அம்மா திராவிடன் கூட்டுறவு வங்கியில் கடை கட்டுவதற்காக ரூ 75,000 கடன் வாங்கினார். அந்த சமயத்திலும் 2 ஆம் பிரதிவாதி வெளிநாட்டில் தான் இருந்தார். அதன்பிறகுதான் 2 ஆம் பிரதிவாதிக்கு திருமணமானது. 2007 ஆம் ஆண்டுதான் 2 ஆம் பிரதிவாதி வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தார் என்றால் சரிதான், இடையில் 2 ஆண்டுகள் இந்தியாவில் இருந்தார், அவை எந்த ஆண்டு என்று என்னால் சொல்லமுடியாது. வாதிகள் என் வீட்டிற்கு அடிக்கடி வந்து போவார்கள் 2 ஆம் பிரதிவாதி வீட்டிற்கு போகமாட்டார்கள். வழக்கு சொத்தில் நான்கு கடைகள் உள்ளன. மூன்று கடைகளின் அனுபவம் 2 ஆம் பிரதிவாதியிடம் இருக்கிறது. ஒருகடைக்கான வாடகையை என்னை வாங்கி கொள்ள சொல்லியிருக்கிறார். இந்த வழக்கு போடும்போது நானும் வாதிகளும் சேர்ந்துதான் வழக்குபோட்டோம் என்றால் இல்லை. வாதிகள் வழக்கு போடபோகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர்கள் எனக்கு எதிராகவும்தான் தாக்கல் செய்திருக்கிறார்கள். வாதிகள், பிரதிவாதிகள் சேர்ந்து ஒன்றாக வாடகை வாங்கியதாக சொல்லியிருப்பது சரியல்ல. வாதிகள் திருமணமாகி கணவர் வீட்டிற்கு சென்றபிறகு எப்போதும் வழக்கு சொத்திற்கு வந்ததில்லை என்றும் வழக்கு சொத்தின் வாடகையை வாதிகள் பெற்றதில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அம்மா இருந்தவரை கொடுத்து கொண்டு இருந்தோம் நான் வாடகையை வாங்கி என்

அக்காவிற்கு கொடுத்திருக்கிறேன். என் அம்மா 2012 ஆம் ஆண்டு இறந்தார். என் அம்மா இறக்கும் வரை நானும், 2 ஆம் பிரதிவாதியும் கூட்டு குடும்பமாக இருக்கவில்லை. 2 ஆம் பிரதிவாதி தனியாக இருந்தார், நான் என் அம்மாவுடன் இருந்தேன். என் அம்மா இறந்தபிறகு அதே வீட்டில் நான் தனியாக இருக்கிறேன். எனக்கும் 2 ஆம் பிரதிவாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை. வாதி மற்றும் முதல் பிரதிவாதி தனிதனியாக அவரவர் ஊரில் வசிக்கிறார்கள். பி.சா.ஆ.2 முதல் 6 ஆவணங்கள் 2 ஆம் பிரதிவாதி என் மீதும், நான் 2 ஆம் பிரதிவாதி மீது கொடுத்த புகார் சம்மந்தமானவைதான். 2 ஆம் பிரதிவாதிதான் புகார் கொடுத்தார் நான் அதற்கு பதில்தான் கொடுத்தேன். அவை 2019 ஆம் ஆண்டு இவ்வழக்கு தாக்கல் செய்தபின்னர் கொடுக்கபட்டவை என்றால் ஆமாம். நான் தேவையில்லாமல் 2 ஆம் பிரதிவாதி மீது புகார் கொடுத்ததால்தான் அவர் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வீடு கட்டுவதற்கு என் பெற்றோருக்கு எந்த வசதியும் இல்லை என்றும், 2 ஆம் பிரதிவாதியின் உதவியால்தான் வீடு கட்டபட்டது என்றால் சரியல்ல. என் அம்மா பால் வியாபாரம் செய்தும், கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியும் வீடு கட்டினார். வழக்கு சொத்தில் நானோ, வாதிகளோ, 2 ஆம் பிரதிவாதியுடன் எந்த காலத்திலும் கூட்டாக அனுபவிக்கவில்லை என்றால் தரைதளத்தில் நானும் அம்மாவும் இருந்தோம். மேல் தளத்தில் 2 ஆம் பிரதிவாதி இருந்தார். என் அம்மா இறந்தபிறகு கடையிலிருந்து வரும் வாடகையை என் சகோதரிகளுக்கு நாங்கள் கொடுக்கவில்லை. நானும், 2 ஆம் பிரதிவாதியும் கடை வாடகையை தனிதனியாகதான் அனுபவித்து வருகிறோம். 2 ஆம் பிரதிவாதியின் அனுமதியுடன்தான் நான் வழக்கு சொத்தில் வசித்து வருகிறேன் என்றும், கடை வாடகையை வாங்கி வருகிறேன் என்றும், சொன்னால் சரியல்ல. அந்த கடை எனக்காக என் அப்பாவால் கட்டபட்டது. வாதிகளும், நானும் 2 ஆம் பிரதிவாதியின் சொந்த உழைப்பை ஏமாற்றுவதற்காக பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.